தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி—1 | தி.பி.2014 | கடகம் 29 | (14-8-1988) | விலை 65 காசு — | இதழ் எண் 22 | பகுதி 33-36

நெஞ்சம் பதறுகிறது!

■ களப்பிரர் ஆட்சிக்காலத்தில்கூட, தமிழினத்திற்கு இவ்வளவு அழிவு நேர்ந்ததில்லை!

■ இலங்கையில் எழுச்சி பெற்ற தமிழர்களை- தலைவர்களை அழிக்கிறார்களே சிங்களவர்கள்!

(இதழ் பறிமுதல் செய்யக் காரணமான கருத்துகள் தவிர்க்கப்பட்டன.)

தமிழ்நாட்டு மக்களே சிந்தியுங்கள்!

(இதழ் பறிமுதல் செய்யக் காரணமான கருத்துகள் தவிர்க்கப்பட்டன.)

பாவலரேறு அவர்களின் பதைப்பு அறிக்கை!

சென்னை, ஆக. 1. பாராண்ட தமிழினம் இன்று இலங்கையில் படுகொலைக்கு ஆளாகி விருக்கிறது. உலக மக்களெல்லாம் பதைபதைப்புடன் பார்த்துக் கொண்டேயிருக்க தமிழினம் அடியோடு அழிக்கப் படுகிறது. சிங்கள வெறியர்கள் தமிழின விடிவுக்காகக் குரல் கொடுத்த தலைவர்களையெல்லாம் பூண்டோடு அழித்துக் கொண்டிருக்கிறார்கள். 'நினைக்கவே நெஞ்சம் பதறுகிறது! தமிழின வரலாற்றில் அரத்தக்கறை படிந்த இருண்ட காலங்கள் பலவுண்டு. ஆனால் அவை எழுத்திலே படித்தவை. எண்ணத்திலே செரித்தவை. ஆனால் இன்று, நம் கண்களின் முன்னால் இலங்கைத் தமிழினம் ஒட்டு மொத்தமாகக் கட்டழிக்கப் படுகிறது. ஆலமரமெனப் பரந்து வாழ்கின்ற அதன் ஆணிவேர்கள் வெட்டப்படுகின்றன. கையற்ற நிலையில் இன்று தமிழன் கண்ணீரும் கம்பலையுமாக கால்போன பக்கம் ஓடுகிறான்! கதறக் கதற உயிரோடு கொளுத்தப் படுகின்றான்! களப்பிரர் ஆட்சிக் காலத்தில் கூட, தமிழினத்திற்கு இவ்வளவு அழிவு நேர்ந்ததில்லை. இலங்கையில் எழுச்சி பெற்ற தமிழர்களை, தமிழர் தலைவர்களை, தலையரிகிறார்களே சிங்களக் கயவர்கள்! காட்டு விலங்காண்டிகள்! இட்லரின் மறுபதிப்பென எழுந்து நின்ற கொலையிற் கொடியவன் செயவர்த்தனன், தமிழின மக்களை ஓட ஓட விரட்டியழிக்கின்றானே! கூண்டோடு வைத்துக் கொளுத்துகின்றானே! இதை எங்கே போய்ச் சொல்வது? எவரிடம் போய் முறையிடுவது? உலகம் ஊமையாகி விட்டதே! உலக ஒன்றியப் பேரவைச் செயலிழந்து போய் விட்டதே!

உலகத் தமிழினத்தின் தாய் மண் என்று கருதப்படும் இத்தமிழகம் நெஞ்சம் பதறித் துடிக்கின்றதே! இந்திய அரசுக்கு மீளா அடிமைப் பட்டுக் கிடக்கும் நம்மால் ஒன்றும் செய்ய முடியவில்லையே! அறிவியல் வளர்ச்சி பெற்ற கருவிகளை வைத்துக் கொண்டு, சிங்கள வேடர்கள் தமிழினத்தை விலங்குகளைச் சுடுவது போல் வேட்டையாடிச் சுட்டுக் கொல்கிறார்களே! ஐயகோ! தமிழன் வீரம், அறம், போர்முழக்கம் எல்லாம் செயலிழந்து கிடக்கின்றனவே! வெறும் ஏடுகளில் எழுதப் பெற்ற வரிகளாகிப்போய் விட்டனவே!

வங்காளத்தில் நடந்த கொடுமைகளை விட, அசாமில் நடக்கின்ற உயிரழிவுகளை விட, இன்று இலங்கைத் தமிழர்களுக்கு வந்த பேரழிவு, மக்களின வரலாற்றில் பெரிய அரத்தக் கறையை உண்டாக்கி விட்டதே! இனி, தமிழினத்தைக்காத்துக் கொள்ளவே முடியாதா? தமிழின வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்தும் முயற்சி வெற்றி பெறவே முடியாதா?

வலிவுள்ள தலைவர்களெல்லாரும் வாயடைத்துக் கிடக்கிறார்களே! இந்திரா என்னும் இரக்கமற்ற ஓர் அரசியல் அரக்கப் பூதத்துக்கு அஞ்சி அலமருண்டு அடிமையாகிக், கிடக்கின்றார்களே! நமக்கென்று தட்டிக்கேட்க ஓர் அரசு இல்லையே! ஓர் அதிகாரம் இல்லையே! தேசியம் என்றும், ஒருமைப்பாடு என்றும் வாய்மதம் கொண்டு தகிடுதத்தம் பேசிய சோற்றுப் புழுக்கைகளெல்லாம் இன்று தில்லியின் கடைக்கண் பார்வைக்குக் காத்துக் கிடந்து சாகின்றனவே! அம்மவோ! இனித்தமிழினத்திற்கு விடிவே இல்லையா? இதற்கு ஏதாவது ஒரு முடிவு வர வேண்டாமா?

சாதிச்சேற்றிலும் சமயப் படுகுழியிலும் கிடந்து உழலும் தமிழினம் இனி ஒன்றுபட்டே ஆக வேண்டும்! அரசியல் புரட்டுகளையும், அகப்பகைகளையும் அறவே ஒழித்து விட்டு அனைவரும் ஒரு கூராக நின்று உரிமைக்குப் பாடுபட வேண்டும். திரைப்பட மேக நோயாலும், பாலியல் தொழு நோயாலும் உள்ளம் அழுகி உயிர்நாறிக் கொண்டுள்ள நம் தமிழின இளைஞர்களை மீட்டு, நாட்டுரிமைப் பணிக்கு ஈடுபடுத்தியாக வேண்டும். சாதிகளை ஒழித்துச் சமயங்களை வேரறுத்து நம்மிடையில் இருந்து கொண்டுள்ள மோதல்களையும், கட்சி முட்டல்களையும் அறவே தவிர்த்துக் கொண்டாக வேண்டும்!

தமிழகத்தில் தொண்டர்களே இல்லை; அனைவருமே தலைவர்கள் என்று ஆளுக்கொரு கட்சி, நாளுக்கொரு கொள்கை என உலாவந்து கொண்டிருக்கும் வெற்று ஆரவார வாய்வீச்சு வீரர்களின் முகத்திலெல்லாம் காறி உமிழ்ந்துவிட்டுத்; தமிழினம் ஒரு கட்டுக்குள் நின்று, தமிழினம் தன் இனவுரிமைப் போராட்டத்தை நடத்தியாக வேண்டும். நாட்டு விடுதலைக்குக் குரல் கொடுக்க வேண்டும்.

அழிந்தது போதும் தமிழினம்! இனி நாம், மூலை முடுக்குகளில் ஒளிந்து கொண்டிருக்கும் நம் இனப் பகையின் அனைத்து முனைப்புகளையும் வெட்டி வீழ்த்தியாக வேண்டும். தமிழினம் இனி இந்த இருபதாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்திலேனும், ஒன்று பட்டுத் தன்னை நிலை நிறுத்திக் கொள்ளத்தவறுமானால், பழைய கிரேக்க, உரோமானிய வரலாற்றுப் பேரினங்களைப் போலும் அழிந்து பட்டுப் போவது உறுதி!

(இதழ் பறிமுதல் செய்யக் காரணமான கருத்துகள் தவிர்க்கப்பட்டன.)

உலகத் தமிழர்களே ஒன்று படுவோம்! உலக உருண்டையில் நமக்கென ஒரு நாடு சமைப்போம்! வாருங்கள்! வாருங்கள்! !

O

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

மலேசியாவில் கொத்தடிமைத் தொழிலாளர்கள்!

இரண்டரை இலக்கம் தமிழர்க்குக் குடியுரிமை இல்லை!

அஞ்சத்தக்கக் காட்டுப் பகுதியில் பல ஆண்டாக 51 தொழிலாளர்கள் சம்பளமும் மாந்தவுரிமையுமின்றிக் கொத்தடிமைகளாக அடி உதை பெற்றுச் சீரழிந்த கதை மலேசியாவில் இப்போதுதான் வெளிவந்திருக்கிறது. இவர்கள் குடியுரிமையற்றவர்கள். சிவப்பு அடையாள அட்டையுள்ளவர்கள். பகாங் காட்டில் செலஞ்சர் அம்பாட் என்ற குடிசைப் பாடியில் (முகாமில்) ஆடுமாடுபோல் அடைக்கப்பட்டு, வெளியுலகத் தொடர்பின்றிப், பிள்ளைகளுக்குக் கல்வியின்றிக் கொடுமையாக உறுப்புக்கொடுமை செய்யப்பட்ட வரலாறு வெளிச்சமாகிவிட்டது. கடந்த சூன் திங்கள் இருகிழமையாக இதே செய்திகளும் படங்களும் நாளேடுகளில் வெளிவந்தன. இவர்களை முற்றாக வேறு ஒரு கிழக்குப் பகுதியான கெம்மான் என்ற புதுக் குடியேற்றப் பகுதிக்குக் கொண்டு சென்றனர்.

பெல்ட்டா என்ற அரசுப் புதுக் குடியேற்ற நிலச்சீர்திருத்தம் பெற்றுச் செம்பனைத் தோட்டங்களில், இவ்வாறு மூன்றுவது குத்தகைத் திட்டத்தின் கீழ் ஆயிரக்கணக்கானவர்கள் குடியேற்றப்பட்டனர். ஏறத்தாழ 14 ஆண்டாகவும், அதற்கு மேலும் பல்லாண்டாகவும் இது நடந்து வருகிறது.

தாக்கப்பட்டவர்களுக்கு ஓய்வூதியம், குமுகப் பாதுகாப்புவைப்பு, வேறு எந்த ஊதியத்திட்டமும் ஒப்பந்தக்காரர்கள் வழங்குவதில்லை. 19-ஆம் நூற்றாண்டில் ஆங்கிலக் குடியேற்றத்துரைமார் ஆட்சியிலும் இவ்வாறு நடந்ததில்லை. தொழிற்சங்கத்திலும் இவர்கள் சேரமுடியாது; அரசியல் கட்சியிலும் சேரமுடியாது. இத்தகையோர் இரண்டு இலக்கத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் பல ஊர்களில் தொழிலாளர்களாகவும், சில இடங்களில் கொத்தடிமைத் திட்டத்தில் மாந்தவுரிமை இழந்தும் உயிருக்குப் போராடுகின்றனர்.

1970 முதல் குடியுரிமைக்கு வேண்டுகை விடுத்த $2\frac{1}{2}$ இலக்கம் தமிழரும்-பலரும் நாட்டின குடிமக்களாக ஏற்கப்படாமல், இவர்கள் இவ்வாறு நயன்மையின்றித் துன்பப்பட்டு வருவதுபற்றி நீண்ட போராட்டம் நடத்திவருகிறார் தமிழர் தலைவர் மருத்துவர், வி. டேவிட். தமிழர்களின் மிகப் பெரிய அரசியல் கட்சியான மலேசிய இந்தியர் பேராயக் கட்சி இதற்காகப் போராடாமல் கதைபேசிக் காலத்தைக் அழிக்கிறது. இந்தக்கட்சி நாடற்றவர்களான இந்த 51 பேரையும் விடுவித்து மறுகுடியேற்றம் செய்திருக்கிறது. எனினும் கடந்த பல ஆண்டாக அவலப்பட்ட இழிவாழ்வுக்கு ஈடாக எந்த இழப்பீடும் பணமும் பெற்றுத்தராமல் செய்து விட்டது மடமையாகும். மறுபடியும் எவ்வகைக் குமுகப் பாதுகாப்புமில்லாமல் செய்திருப்பதன் மூலம் இவர்கள் தொடர்ந்து அடிமையாகத்தான் வாழவேண்டும். இந்த வேளை பல்லாயிரக் கணக்கான அண்டைநாட்டுத் தொழிலாளர்கள் இடைக்கால வேளையுரிமைப்பட்டயம் பெற்று முழுவுரிமையுடன் வாழ்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம்)

பாவலரேறுவின் அறிக்கைக்கு திரு. அமிர்தலிங்கம் விடுத்த மறுப்புக் கடிதம்!

சூலை 16 பாவலரேறு 'தமிழ்நிலம்' (12-6-83) இதழில் விடுத்திருந்த அறிக்கைக்கு, இலங்கை எதிர்க்கட்சி முதல்வரும், தமிழீழ விடுதலைக் கூட்டணிப் பொதுச் செயலாளரும் ஆகிய திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள், ஒரு மறுப்பு மடலைக் கடந்த 6-7-83-ஆம் நாள் விடுத்துள்ளார். அதில் அவர் கூறியுள்ளதாவது :

பேரன்புடைய ஐயா,

தமிழ்நிலம் இதழில் (12-6-1983) "ஈழத்தமிழர்க்கு இரண்டகம் செய்கின்றார் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கம்" என்ற தலைப்பில் தாங்கள் வெளியிட்டுள்ள அறிக்கையைக் கண்ணுற்றேன். இங்குள்ள உண்மை நிலையைச் சரிவரப் புரிந்து கொள்ளாமல் தங்களைப் போன்ற பெரியோர்கள் அவசரப்பட்டு அறிக்கை விடுவது அழகல்ல.

தங்கள் அறிக்கையில் சென்ற இருமாதங்களாகத் தமிழ் ஈழத்தில் நடந்துவரும் காவற்படையினரின் அட்டூழியங்களைப் பற்றி விரிவாகக் குறிப்பிட்டிருக்கின்றீர்கள். ஆனால் "அவற்றைப்பற்றி எந்த நிலையிலும் எந்தவொரு சொல்லும் வாய் திறந்து கண்டித்துக் கருத்தைக்கூறாமல் வாய்மூடி ஊமையர்களாய் இருப்பது நமக்கு மிகுந்த வியப்பையும் துயரத்தையும் தருகின்றது" என்று தாங்கள் குறிப்பிட்டிருப்பது எமக்கு மிகுந்த வியப்பையும் துயரத்தையும் தருகின்றது. தங்களின் கூற்று முழுவதும் தவறானது. மே மாதம் 18-ஆம் திகதி வாக்குச் சாவடியில் காவல் காத்துநின்ற ஒரு சிங்களப் படை வீரர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து கந்தர்மடம் பகுதியில் காவற்படையினர் கட்டவிழ்த்துவிட்ட தீயிடுதல், கொள்ளையடித்தல் போன்ற பேரழிவைத் தடுப்பதற்குத் தலைவர் சிவசிதம்பரமும் நானும் நடவடிக்கை எடுத்துக் கொழும்பிலிருந்து படைத்தளபதியையும்; காவற்றுறைத் தலைவரையும் யாழ்ப்பாணம் வரச்செய்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திராவிட்டால் வெறிகொண்ட சிங்களப்படையினால் எத்துணை அழிவு ஏற்பட்டிருக்கும் என்பதைத் தாங்கள் அறியமாட்டீர்கள். அவற்றைத் தடுத்து நிறுத்தியது மாத்திரமன்றி அதைக் கண்டித்துச் சிங்களப்படையை உடன் திருப்பி அழைக்குமாறு நாட்டுத் தலைவர் சயவர்த்தன அவர்களுக்கு நாங்கள் கோரிக்கை விட்டதைத் தாங்கள் அறியமாட்டீர்கள். இலங்கையிலுள்ள பத்திரிகைகளெல்லாம் எமது கண்டன அறிக்கையை வெளியிட்டது தங்களுக்குத் தெரியாதிருக்கலாம். இக் கொடிய செயலைக் கண்டித்து நானும் தலைவர் சிவசிதம்பரமும், திரு. யோகேஸ்வரனும் இலங்கை நாடாளுமன்றத்தில் கடுமையாகக் குரல் கொடுத்து அமைச்சர் சிறில் மத்தியூவோடும் அவருடைய ஆதரவாளரான ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சிலரோடும் கடும்மோதலில் ஈடுபட்டதைத் தாங்கள் அறியாமலிருக்கலாம். தங்களுக்குத் "தற்கொலைக்கொப்பான மனத்துன்பமாகவும். அவமானமாகவும்" ஏற்பட்டது தாங்கள் இவற்றை அறியாத காரணத்தினாலேயேயன்றி எங்கள் தவறினால் அல்ல. இதையொட்டி நாடாளுமன்றத்தில் நாம் ஆற்றிய உரைகளை இத்துடன் அனுப்பி வைக்கின்றேன்.

தமிழ்ஈழத்தின் உள்ளூராட்சி மன்றங்களை எமது ஆளுமையிலேயே வைத்திருப்பது இனப்பாதுகாப்புக்கும், விடுதலை இயக்கத்திற்கும் அவசியமென்பது எங்கள் கருத்து. தீவிர விடுதலை இயக்கங்களான ஐரிஸ் விடுதலை இயக்கங்கள் போன்றவை இதேவழியை இப்போதும் கடந்த காலத்திலும் கைக்கொண்டு வந்திருக்கின்றன. திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா போன்ற இனக்கலப்புள்ள பகுதிகளில் இம்மன்றங்களையும், அவற்றினால் நாம் பெறக்கூடிய அதிகாரத்தையும் எமது மக்களின் பாதுகாப்புக்குப் பயன் படுத்த வேண்டியது அவசியமென்பது எமது இயக்கத்தின் ஒருமனதான முடிவாகும். நாம் இத் தேர்தல்களைப் புறக்கணித்து ஆளுங்கட்சி ஆணையாளர்களை நியமித்து இவற்றை நிர்வகிப்பதனால் தமிழ் இனத்திற்குத் தீமையேயன்றி நன்மையேற்பட முடியாது. நாம் இத் தேர்தல்களில் நியமனபத்திரங்களைத் தாக்கல் செய்தபோதோ, வேட்பாளர்களை நிறுத்தித் தேர்தல் வேலைகளை ஆரம்பித்தபோதோ தேர்தல்களைப் புறக்கணிக்குமாறு இளைஞர் இயக்கம் கோரவில்லை. மக்களின் பொறுப்பு வாய்ந்த இயக்கத்தோடு எவ்வகையிலும் கலந்து ஆராயாது எங்கோ, யாரோ எடுத்த முடிவைத் துப்பாக்கி முனையில் எம் மீது திணிக்க முற்பட்டால் அதைப் பொறுப்புள்ள எந்த இயக்கமும் ஏற்றுக்கொள்ள முடியாது. தமிழ்ஈழத்தில் வாழுகின்ற தமிழ்ப்பொதுமக்களில் 90% மாணவர் இக் கருத்தையே கொண்டிருக்கிறார்கள். ஈழத்தில் எமது மக்கள் இருக்குநிலையில் பாராளுமன்றப்பதவிகள் எமது மக்களின் பாதுகாப்புக்கும், விடுதலை இயக்க வளர்ச்சிக்கும் அவசியமெனபதே இங்குள்ள மிகப் பெரும்பாலான தமிழ்மக்களின் கருத்து. சென்ற இரண்டு மாதங்களில் திருமலையிலும், வவுனியாவிலும் சிங்களக் காவல்துறையினராலும், படையினராலும், சிங்களக்காடையரினாலும் ஏற்படுத்தப்பட்ட பேரழிவுகளுக்கு மத்தியில் எமது மக்களுக்குப் பாதுகாப்பைத் தேடிக் கொடுக்க பாராளுமன்ற உறுப்பினர், மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் போன்ற பொறுப்புகளில் நம்மவா இருந்த காரணத்தினால் அப்பதவிக்குரிய அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்களைப் பாதுகாத்தார்கள். எங்களில் யாரும் முக்காலமும் உணர்ந்த முழு ஞானிகளாக எம்மைக் கருதிக் கொள்ளவில்லை. எமது அறிவுக்கும் ஆற்றலுக்கு மேற்ப எம்மால் இயன்ற பணியைச் செய்வதில் ஈடுபட்டிருக்கின்றோம். பொறுப்பற்ற சிலா எதையும் கூறலாம், செய்யலாம். ஆனால் மக்களால் பொறுப்பை அளிக்கப்பட்ட எமது இயக்கம் மக்களை அழிவிலிருந்து பாதுகாக்க அதே நேரத்தில் அவர்கள் ஆணைப்படி விடுதலை இயக்கத்தை முன்னெடுத்துச் செல்ல கடமைப் பட்டிருக்கின்றோம். இந்தக் கடமைகளை எம்மால் இயன்றளவு நிறைவேற்றியே தீருவோம். நான் யாருக்கும் இரண்டகம் செய்தது கிடையாது. பெரியவராகிய தாங்கள் இப்பழியை என்மீது சுமத்தியிருப்பது மிகுந்த துன்பம் தருகின்றது என் வாழ்நாள் முழுவதையுமே ஈழத்தமிழ்மக்களின் வாழ்வுக்காக அர்ப்பணித்த எமக்கு இவ் அவப்பெயரைச் சூட்டியதையிட்டு தங்கள் மீது எனக்குக் கோபம் இல்லாவிட்டாலும் பொறுப்புள்ள ஒருவர் என்ற நிலையிலிருந்து தாங்கள் தாழ்ந்து விட்டீர்கள் என்பதைத் கூறிவைக்கக் கடமைபட்டவனாக இருக்கின்றேன்.

இப்படிக்கு,
தங்கள் அன்புமறவாத
அ. அமிர்தலிங்கம்
எதிர்க்கட்சி முதல்வர்.

மார்வாடிகள்!

தமிழகப் பொருளியலைப் பெருமளவில் மார்வாடிகள் ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறார்கள் அரசு ஆதரவுடன்!

1982-83-இல் உரிமம் (Licence) பெற்ற வட்டிக் கடைகள் 18,000. இதில் வடநாட்டு மார்வாடிகள் 3000 கோடிக்கு வணிகம் செய்து 1500 கோடி உருபாய் வருவாய் பெறுகிறார்கள். தமிழக அரசின் ஆண்டு வரவுசெலவே உரு. 600 கோடிதான். இந்தியாவில் அதிக வட்டிக் கடைகள் இருப்பது தமிழகத்தில் தான். சென்னையில் மட்டும் 4000 வட்டிக் கடைகள் உள்ளன.

அடகு வணிகத்தில் மட்டுமன்றி அங்கெங்கெண்ணாத படி எங்கும் மார்வாடிகளின் 'ஆக்டபசு' (கடலுயிரி) கைகள் நீண்டிருக்கின்றன.

போக்குவரத்துக் கருவிகளில் இவர்கள் ஆளுமை; சுமையுந்துகள் — 24,386, வாடகையுந்துகள் — 10,429 தானியங்கிகள் (வாடகைக்கு) 7,893.

இதைத் தவிர ஞெகிழி (Plastic) மூலப் பொருட்கள், இரும்பு ஒதுக்கீடு, பைஞ்சுதை (Cement) ஒதுக்கீடு, பூச்சி மருந்து ஆளுமை, மருந்துகள் மொத்தக் கொள் முதல், மின்சாரக் கருவிகள், துணித் துறையில் தன்னதிகாரம், தாள்கள் மொத்த முடக்கம் எல்லாம் இவர்கள் கைகளில். இவர்களன்றிக் 'கடைவீதியில் ஓர் அணுவும் அசையாது.

இவர்கள் பணம் பண்ணுவதற்காக எதற்கும் அணியமானவர்கள்; யாரையும் விலை கொடுத்து வாங்குபவர்கள் என்பது நாடறிந்ததே. கல்வித் துறையில் கூட இவர்கள் கால் வைத்துப் பச்சை வணிக நிறுவனங்களாக மாற்றி வருகிறார்கள்,

50 ஆண்டுகளாக இருக்கும் குசாரத்தின் அகராதியில் மார்வாரி என்றால் ஏமாற்றுபவன், (மோசக்காரன்), நாணயமற்றவன் (அயோக்கியன்). நயனிலா (அநியாய) வட்டி வாங்குபவன் என்றே பொருள் தரப்பட்டுள்ளது. ஆளுங்கட்சி எதுவாக இருந்தாலும் அதனுடன் உடன்பாடு செய்து, கொள்வதோ அல்லது ஆட்சியாளர்களை விலைக்கு வாங்குவதோ இவர்கள் வழக்கம்.

(ஆதாரம் : கறுப்புமலர், பறக்கும் படைவெளியீடு)
நன்றி : சுட்டி. தமிழ்ப்படுத்தம். தாமரை. தமிழ்வென்றி.

பாவலரேறு வீட்டிலும் தென்மொழி அச்சகத்திலும் காவல்துறையினரின் புலனாய்வும் 'தமிழ்நிலம்' இதழ் பறிமுதலும்!

கடந்த 4-8-83 வியாழனன்று பகல் 2-30 மணியளவில், குற்றப்பிரிவுக் காவல்துறை அதிகாரிகள் திடுமென, பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் வீட்டில் புகுந்து, தமிழீழத் தொடர்பான சில செய்திகளுக்காகப் புலனாய்வு செய்தனர். வீட்டில் புலனாய்வு நடந்த அதே நேரம் தென்மொழி அச்சகத்திலும் புலனாய்வுக் காவல்துறையின் இன்னொரு பிரிவு ஆய்வு நடத்தியது.

இரண்டு இடங்களிலும் அவர்கள் தமிழீழத் தொடர்பாக அண்மையில், உ.த.மு.க. தலைமையகம் வெளியிட்டிருந்த ஏராளமான அறிக்கைகளையும, சுவரொட்டிகளையும் கைப்பற்றியதுடன், அதே அறிக்கையையும் வேறு சில செய்திகளையும் தாங்கி, மறுநாள் அஞ்சலுக்குப் போகவிருந்த 'தமிழ்நிலம்' இதழின் அச்சான அத்தனைப் படிகளையும் (இதழெண் 2) பறிமுதல் செய்து எடுத்துச் சென்றனர். இவற்றுடன், அவ்வறிக்கைகள் செய்யப்பட்டிருந்த அச்செழுத்துகளையும் கைப்பற்றிச் சென்றனர். அனைத்துப் பொருள்களின் மொத்த மதிப்பீடு உருபா மூவாயிரத்துக்கும் மேலிருக்கும். இப் புலனாய்வின் தொடர்பாகத் தென்மொழி அச்சகத்தின் மேலும் ஆசிரியர், மேலாளர் இவர்களின் மேலும் காவலர்கள் வழக்குத் தொடர்வார்கள் என்று தெரிய வருகிறது.

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி 1 14-8-1983 இதழ் எண்: 22 பக்கம் 33-36

எழுந்துள்ள தமிழின எழுச்சிக் குரல் தொடர்ந்து ஓங்கி ஒலிக்கட்டும்!

சூழ்நிலைகளால் நெருக்கி அழுத்தப்படாதவரை உரிமை உணர்வு எழாது. உரிமை உணர்வு எழாவிட்டால் கோரிக்கை பிறக்காது. கோரிக்கை இல்லாவிட்டால் தேவையானது கிடைக்காது. கோரிக்கை இரண்டு வகையானது. ஒன்று கருத்தளவாய் வேண்டுதல்; இரண்டு செயல் அளவாய் எழுச்சி பெற்றுப் போராடுதல். தொடர்ந்து போராடுதல் என்பது தொடர்ந்து அடக்கப் பெறுகையில் புரட்சியாக வெடிக்கும். அவ்வாறு வெடித்ததே இப்பொழுது உலகக் கவனத்தை ஈர்த்துள்ள இலங்கைத் தமிழீழப் போராட்டம்.

உலகெங்கும் பரவி வாழும் தமிழ்ப் பேரினம் கடந்த காலங்களில் இருந்த படிப்படியான பேரிழப்புகளுள் அது தனக்கென இருந்த நாட்டை இழந்தது தலையாய பேரிழப்பாகும். ஒருகாலத்தில் 'ஒருமொழி வைத்து உலகாண்ட' இவ்வினத்திற்கு இவ்வுலகின் எந்த ஒரு நாடும் இப்பொழுது சொந்த நாடாக இல்லாமல், அவ்வினமக்கள் போய் வாழ்கின்ற எல்லா நாடுகளிலும் ஓர் அடிமை இனமாகவே வாழவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது, காலத்தால் ஏற்பட்ட ஒரு கொடுமையாகும். அந்நிலையினின்று மீளும் காலம் இப்பொழுது வந்து கொண்டிருக்கிறது. இதுவும் ஒரு காலத்தின் கட்டாயமே ஆகும்.

தமிழீழப் போராட்டத்தால் தமிழீழ மக்களுக்கு ஏற்பட்ட, ஏற்பட்டு வரும், ஏற்படப் போகும் அழிவுகள் மிகவும் கொடுமையானவையே! உலகில் வேறு எந்த இனத்திற்கும் இத்தகைய கொடுமைகள் நேர்ந்ததில்லை. வரலாற்றில் அழிந்தனவாகக் காணப்படும் பேரினங்கள் சில தன்னழிவாக ஏற்படுத்திக் கொண்ட நிலைகளையே பெரிதும் பார்க்கிறோம். ஆனால் தமிழின அழிவு பெரும்பாலும் புறநிலைத் தாக்கங்களாலேயே ஏற்பட்டதை வரலாறு காட்டுகிறது. அதற்குப் பெருங்காரணமாக உள்ளது, தமிழினத்தில் எந்தக் காலகட்டத்திலும் இழந்த ஒற்றுமையை மீட்டுக் கொள்ளாத ஒரு நிலையே ஆகும்.

கெட்டதற்கோ நல்லதற்கோ தெரியவில்லை, தமிழீழப் படுகொலைகளால், உலகில் தமிழினம் எழுச்சி பெற்றுள்ளது. இன அழிவுகள் இன எழுச்சிகளை மீண்டும் உருவாக்கிக் கொடுக்கும் என்பது வரலாறு. அந்த வரலாறு திசைதிரும்பியிருக்கிறது. எழுந்துள்ள இந்த உணர்வு இளைஞர்களிடம் பரவி நிலைத்து நிற்க வேண்டும். அப்படி ஒரு வியப்பு நிகழுமானால் அடுத்த நூற்றாண்டுத் தொடக்கத்திற்குள்ளாக, தமிழினம், தான் இழந்து போன ஆட்சியுரிமையை, இவ்வுலகில் எங்கேனும் ஒரு நிலப்பகுதியுள் அமைத்துக் கொள்வது கட்டாயம் உறுதியாகிவிடும்.

தாயும் சேயுமாக அருகருகில் இருந்து உள்ளுணர்வுகளைப் பகிர்ந்து கொள்வதற்கென வாய்ப்பு ஏற்பட்டிருப்பது தமிழகத்திலும் தமிழீழத்திலுந்தான்! எனவேதான் இந்திய அரசு, இந்த உணர்வு நெருக்கத்தை வளர்க்க விரும்பாமல் இருக்கிறது. தமிழீழத் தோற்றம் எங்குத் தமிழ்நாட்டிலும் ஓர் ஆட்சி மாற்றத்தை உருவாக்கி விடுமோ என்று தில்லியரசு அஞ்சுகிறது. ஆனால் அந்த அச்சமே அதன் கீழ்மையான நடை முறைக்கு வழி வகுத்து, நமக்கும் ஒரு விடிவைத் தேடித் தரப் போவதை உலகம் காணத்தான் போகிறது.

இலங்கையில் மட்டுமன்று, இந்தியாவிலும் தமிழர்களுக்கு இதே நிலைமைதான்! அடிப்படையில் சில வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் அதுவே உரிமையாகிவிடாது. செல்வர் வீட்டு நாய் சிற்றுண்டி சாப்பிடுகிறது; பால் குடிக்கிறது; படுக்கையில் தூங்குகிறது. ஏழை வீட்டு நாய் மலத்தைச் சாப்பிடுகிறது; சேற்றுத் தண்ணீரைக் குடிக்கிறது, குப்பைத் திரட்சியில் குழி பறித்துத் தூங்குகிறது. இந்தியத் தமிழர் அடிமை நிலையிலும், இலங்கைத் தமிழர் அடிமை நிலையிலும் இருக்கும் வேறுபாடுகள் இவைதாம்!

எனவே, உலகத்தமிழினம் ஒட்டுமொத்தமாக உரிமை பெற்றாக வேண்டும். இல்லெனில், இன்று இலங்கையில் நடப்பது நாளை மலேசியாவில் நடக்கும்; சிங்கப்பூரில் நடக்கும்; இங்கிலாந்தில் நடக்கும், இந்தியாவிலும் நடக்கும்! அவ்வாறு நடக்குமானால், சேய்க்கு வந்த தீங்கைத் தாயால் தடுத்து நிறுத்த முடியாத நிலையில், தாய்க்குவரும் தீங்கைத் தடுத்த நிறுத்தச் சேயால் மட்டும் எப்படி முடியும்? ஆகவே, தமிழீழ அழிவைப் பொறுக்காமல் இன்று உலகமெங்கணும் எழுந்துள்ள எழுச்சிக்குரல், உடனே அடங்கிவிடாமல், தொடர்ந்து ஓங்கி ஒலிக்கட்டும்! அந்த ஒலி விரைவில் விடுதலைக்குரலாக மாறட்டும்! தமிழீழமோ தமிழ்நாடோ, அல்லது வேறெதுவோ உலகத் தமிழர்களுக்கென்று ஓர் உரிமை நாடாக மலரட்டும்! வாழ்க ஒற்றுமை! உரிமை! விடுதலை!!!

ஆனால், தமிழ் நெஞ்சங்களே! வீரத் தமிழ் மறவர்களே! உங்களைப் பதறப் பதற வாரிக் கொடுத்து விட்டோமே!

"அண்டையிலே தமிழ்நாடு!
அதுதான் எம் தாய் வீடு!
பண்டையிலே பூத்த தமிழ்ப்
பாலந்தான் எம் பீடு!
கொண்டையிலே பூ கசங்கக்
கொடியிடையில் துணி கசங்கத்
தண்டையிலே ஒலி அழுங்கத்,
தங்கை அக்கை தீதென்றால்,

வந்திடவா மாட்டார்கள்!
வாழவைத்த அண்ணன் மார்?
கொந்திடவா மாட்டார்கள்,
சிங்களவன் குலை உயிரை?
தந்திடவா மாட்டார்கள்
தம்பிகளின் தனிமதிப்பை?" —
இந்தபடி எண்ணீரோ
எந்தமிழத் தாய்மாரே?
எங்களுடை தங்கையரே!
எங்களுடை அக்கையரே,
செங்கழுகு புறுக்குஞ்சின்
சிறகடித்து மேல்பறந்து
பொங்கு(அ)ரத்தம் பீறிடவும்
போகும் உயிர் வீறிடவும்
சிங்களவன் உம்மைச்
சிதைத்திடும்அப் போதினிலே!

"எட்டி முழக்க மிட்டால்
எட்டிலக்கம் பேர் வருவார்!
கொட்டி அழைத்திட்டால்
கோடிக்குக் குறையாது!
அட்டியில்லை, தமிழ்நாட்டின்
அண்ணன் மார் தம்பிகள் மார்!
கெட்டி வயிரங்கள்
கேட்பதற்கு வருவார்கள்!

சிங்களவர்க் கெங்களுடை
செய்தி தெரியாது!
பொங் குணர்வுத் தமிழர் குலம்!
பூரித்த வீரர் குலம்!
திங்களொடும் பரிதியொடும்
திரப் பிறந்தவர்கள்!
மங்காத வீரம்,
மலையுடைக்கும் வீறுநடை!

பக்கத்தில் வாழ்கின்றார்!
பதினெட்டுக் கற்கள் தாம்!
முக்கி எழுந்தால்
முழங்கால் கடல்நீர் தான்!
எக்கிக் குரல்கொடுத்தால்
இடுப்பொடிக்க வந்திடுவார்!
சிக்கி விட்டால் சிங்களவன்
சிறு குடலும் மிஞ்சாது!
கொன்று குவித்திடுவார்,
சிங்களவக் காடையரை!
தொன்றுதொட்ட வீரம்
தொலைந்தழிந்தா போயிருக்கும்?

என்றேனும் ஓர் நாள்
ஈழம் கிடைக்காதா?" —
என்றெண்ணி இருந்தீரோ?
நம்பிக்கை இழந்தீரோ?

சோழன்மார் பாண்டியன்மார்
சேரன்மார் முந்தையர்கள் —
ஈழத் திருநாட்டின்
எம்மின் உடன்பிறந்தோர் —
போழ உடல் பிளக்க,
புகைக்குழலின் இடிவெடிக்கு
வீழ, உயிர் கழல,
வீறிடும் அப் போதினிலே!

ஆனாலும் வீரர்களே!
ஆர்த்தெழுந்த நெஞ்சங்களே!
போனாலும் ஒருமுறைதான்
போனஉயிர் மீளாது.
மானத் தமிழீழம்!
மற்றெதற்கு வாழ்வுநலம்?
கூறுத் தமிழ்வீரம்!
கொப்பளிக்கும் செம்மாப்பு!

— என்றபடிப் போரிட்டீர்!
எதிர்பார்த்துக் காத்திருந்தீர்!
தின்றுழலும் வாழ்க்கையிலே
தினிப்பை நிறைந்துவிட்டால்
குன்றெதிரே பகையாகிக்
குலைநடுங்க வந்தாலும்
நின்றெதிர்க்க மாட்டாத
நெடுமரமாய் இருந்துவிட்டோம்!

சாதிக்குப் போரிடுவோம்!
சழக்குமதக் கூறிடுவோம்!
வீதிக்கு வீதி
விரிசலுற்றுப் போய் விட்டோம்!
பாதிக்குக் குறைந்துவிட்டோம்!
பண்பாடு கலையிழந்தோம்!
ஏதினிமேல் முன்னேற்றம்?
எதற்கினிமேல் வாழ்ந்திருப்போம்?

தமிழீழம் கேட்கின்ற
தங்க மறவரை நாம்
அமிழாத வீரப்போர்
ஆங்கதனில் பறிகொடுத்தோம்!
உமிழ்கின்ற புன்பகையின்
உயிர்குடிக்கத் தவறிவிட்டோம்!
தமிழீழ மறவர்களே!
தாழ்ச்சியில்லா வீரர்களே!

மாயாத் தமிழினத்தின்
வாகைக் களிறுகளே!
சாயாத் தமிழ்மரபின்
சாகா உருவங்களே!
காயாத உங்கள்
குருதியின்மேல் ஆணையிட்டோம்!
தாயகத்தை மீட்போம்!
தமிழீழம் காண்போமே!

தென்னார்க்காடு வடக்கு உ.த.மு.க. பொருளர் தளைப்பட்டார்!

உ.த.மு.க. தலைமையகம் வெளியிட்ட அறிக்கை ஒன்றைப் பொதுமக்களிடை பரப்பிய, தென்னார்க்காடு வடக்கு உ.த.மு.க. மாவட்டப்பொருளர் திரு. அ. நக்கீரன் 2-8-83-இல் விழுப்புரத்தில் காவல்துறையினரால் தளைப்படுத்தப்பட்டுள்ளார் என்று தெரிகிறது. உ.த.மு.க. அன்பர்களுக்கு நேரும் இடையூறுகளை உடனுக்குடன் தலைமையகத்துக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(27-7-83-ஆம் நாள் கலைஞர் தலைமையில்; சென்னையில் நடந்த தமிழீழத் தமிழர் கொடுமைக்கண்டனப் பேரணியின பொழுதுபரப்பப்பட்ட சிற்றறிக்கை.)

ஒற்றுமை! உரிமை! விடுதலை!

இலங்கைத் தமிழர் இனப்படுகொலை இனிமேலும் தொடருமானால்...

தமிழகத்திலும் இனநலப் போராட்டக் கிளர்ச்சி வெடிக்கும்!

தமிழகத்தை ஏற்கனவே பலவகையிலும் சுரண்டிவாழும் வடநாட்டு வல்லாண்மை இனங்கள் இங்கிருந்து விரட்டியடிக்கப்படும்!

எச்சரிக்கை! எச்சரிக்கை! எச்சரிக்கை!

உலகத் தமிழர்களே ஒன்றுபடுவோம்!

உலக உருண்டையில் நமக்கென முழு ஆளுமை கொண்ட ஒரு நாடு சமைப்போம்!

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்,
தலைமையகம், சென்னை-5.

தென் மாவட்டச் சுற்றுச்செலவில் கழக முதல்வர்!

திருச்செந்தூர் வட்டம் குறும்பூரில் 24-6-83 அன்று காலை, உ.த.மு.க. வட்டக்கிளைத் தலைவர் திரு. எட்வர்டு மலர் வேந்தன், எசுதர் அறமுடையாள் அவர்களின் மகள் செல்வி. வண்டார் குழலியின் பூப்பு நீராட்டு விழாவில் பாவலரேறு தலைமை தாங்கினர்.

-83-மாலை திண்டுக்கல் தமிழ்ச் சங்கத்தில் பாவலரேறு உரை நிகழ்த்துகிறார்கள்.

கடந்த 26-6-83-ஆம் நாள் இரவு திண்டுக்கல், மேட்டுப்பட்டியில் உள்ள பழந்தமிழ்க் குடியிருப்புக்குப் 'பாவேந்தர் குடியிருப்பு' என்று பாவலரேறு பெயர்சூட்டிப் பெயர்ப் பலகையைத் திறந்து வைத்தார்.

26-6-83 இரவு பாவேந்தர் குடியிருப்பில் வாழும் பழந்தமிழர்களுடனும் தலைவர்களுடனும் அவர்கள் அளித்த பொது விருந்தில் பாவலரேறு கலந்து கொண்டு உணவுண்டார்.



26-6-83 இரவு திண்டுக்கல், மேட்டுக்குடியில் உள்ள பொதுத்திடலுக்குப் பண்டார வன்னியன் திடல் என்று பெயர்சூட்டிப் பாவலரேறு பெயர்க் கல்லைத் திறக்கும் காட்சி.

0 மொழிப்பற்று இருந்தால்தான் இனப்பற்று ஏற்படும்!

0 சமசுக்கிருதம் அகப்பகை; ஆங்கிலம் புறப்பகை.

0 அகப்பகையைத் தடுத்து நிறுத்தாவிடில் தமிழினம் அழிந்துவிடும்!.

சென்னை தி.க. இளைஞர்மாநாட்டில் பேரா. அன்பழகன் கருத்து.!

சென்னை பெரியார் திடலில், திராவிட கழக இளைஞர்களின் 2 ஆவது நாள் மாநாடு, சூலை 10-இல நடந்தது. முதலில், "தமிழர்களின் வீழ்ச்சிக்குப் பெரிதும் காரணம் - அகப்பகையா? புறப் பகையா? ஊடுருவலா?" என்ற தலைப்பில், பட்டிமன்றம் நடந்தது. அதை யடுத்து தி.மு.கழக பொதுச் செயலாளர் அன்பழகன் பேசினர். அப்போது, அவர் கூறியதாவது-

தமிழர் இன உணர்வு கொள்ள வேண்டும்:

தமிழர்களின் இன உணர்வு மெல்ல மெல்ல அழிந்து கொண்டு இருக்கிறது. தமிழர்களே தங்களை யார் என்பதை மறந்து கொண்டு இருக்கிறார்கள். ஆரியர்கள், தங்கள் இனத்தை மறப்பது இல்லை. ஐரோப்பியர்கள், தங்கள் இனத்தை மறப்பது இல்லை. தமிழர்கள் மட்டும்தாம். தங்களையே மறந்து கொண்டு இருக்கிறார்கள். - இந்த நிலை, மாற்றப்பட்டாக வேண்டும். அதற்கு, இதுபோன்ற விழாக்கள் பெரிதும் பயன்படும்.

தமிழர்களுக்கு, நீண்ட கால வரலாறு உண்டு ஒரு காலத்தில், தமிழர்களிடம் இன உணர்வு நிறைந்து இருந்தது. தமிழன் ஆற்றல் • மிக்கவனாக வாழ்ந்தான். கடல்கடந்து, புலிக் கொடியைப் பறக்க விட்டுக் கொண்டு இருந்தான். இடையிலே, தமிழர்களிடம் சரிவு ஏற்பட்டது. தமிழர்கள் வாழ வேண்டும், 'தமிழர்கள் இனம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறவர்கள் இடைக்காலத்தில் சரிவு ஏன் ஏற்பட்டது என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும். அதற்கு இதுபோன்ற பட்டி மன்றம் உதவியாக அமையும்.

அகப்பகையும் புறப்பகையும்:

தமிழர்களின் வலுக் குறைவு, நம்பிக்கையின் காரணமாக ஏற்பட்டு விட்டது. புறப் பகையை வென்று விடலாம். அகப்பகையை மிகப் பெரிய சிந்தனை ஆற்றல் இருந்தால் தான் புரிந்து கொள்ள முடியும். அகப்பகையைப் புரிந்து கொண்டால், ஊடுருவித் தடுத்து நிறுத்த முடியும. அகப்பகையைத் தடுத்து நிறுத்தாவிட்டால், தமிழர் இனம் அழிந்து விடும்.

மொழியைப் பொறுத்த அளவில், சமசுக்கிருதம் அகப் பகை. இந்தி, ஊடுருவல். ஆங்கிலம், புறப்பகை. வட மொழியான அகப்பகையை அழித்தால் தான், தமிழ் இனம் வாழ முடியும். புறப்பகையை எளிதில் சமாளித்து விடலாம். **தமிழ் இனத்தை. தமிழர்களே காட்டிக் கொடுப்பது அகப் பகையாகும்.** இன உணர்வு இல்லாதபோது, மான உணர்வு எப்படி ஏற்படும்? மொழிப் பற்று இருந்தால்தான் இனப் பற்று ஏற்படும்.

தமிழர்கள் சீக்கியர்கள் போல் உணர்வு கொள்ள வேண்டும்.

பஞ்சாபில் சீக்கியர்கள் இன உணர்வு கொண்டு இருக்கிறார்கள். அதுபோன்ற **இன உணர்வு. தமிழர்களுக்கு ஏற்பட வேண்டும்.** சீக்கியர்களை விட, **இன உணர்வில் தமிழர்கள் குறைந்தவர்கள் அல்லர் என்ற எண்ணம் ஏற்பட்டாக வேண்டும்.** பெரியார், அண்ணாவின் எண்ணம் நிறைவேற வேண்டும் என்றால், தமிழர்கள் மிகப் பெரிய கடமையைச் செய்தாக வேண்டும். அஃது அறப்போராட்டமோ அல்லது புதிய எண்ண ஓட்டமோ-ஏற்பட்டாக வேண்டும். **தமிழர்களின் இனம் வாழ. எந்தப் போராட்டம் ஏற்பட்டாலும், அதில் தி.மு. கழகம், முழுமையாகப்பங்கு ஏற்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

சோவியத்து நாட்டில் எத்தனை மொழிகள் பேசப்படுகின்றன?

சோவியத்து நாட்டில் மொத்தம் 128-132 மொழிகள் பேசப்படுகின்றன.

சோவியத்து ஒன்றியத்தில் 100-க்கு மேற்பட்ட தேசிய இனங்கள் உள்ளன.

சோவியத்து ஒன்றியத்தில் கபர்தினியர்களும் சிர்காசியர்களும் ஒரே மொழி பேசுகின்றனர். ஒரே தேசிய இனத்தில் இரண்டு இலக்கிய மொழிகள் ஒரே சமயத்தில் வளரும் நிலவரமும் உண்டு. மொழி என்றால் என்ன, வட்டார வழக்கு மொழி என்றால் என்ன என்ற சிக்கலுக்கு இதுவரை தீர்வு காணப்படவில்லை; எனவே, சோவியத்து நாட்டிலுள்ள மொழிகளின் எண்ணிக்கை பற்றிச் சரியான விளக்கம் கொடுக்க முடியவில்லை. பிற தேசிய இனங்களின் படிநிகராளியரும் சோவியத்து நாட்டில் வாழ்கின்றனர்.

இவையனைத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டு, சோவியத்து நாட்டில் 130 மொழிகள் உள்ளன என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

சோவியத்து ஒன்றியத்தில் எல்லா மொழிகளுக்கும் சம உரிமை உண்டு. அனைத்து சோவியத்து தேசிய இனங்களின் பொது மொழியாக உருசிய மொழி விளங்குகிறது.

— எம். இசயேவ்

அகரமுதலித் தொகுப்புப் பேரறிஞர்

பேரா. மு. சதாசிவம் இங்கிலாந்துச் செலவு!

உலக அகரமுதலி மாநாட்டில் கலந்துகொள்கிறார்!

பெரியார் மாவட்ட உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் அமைப்பாளரும், ஈரோடு வாசவிக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியரும், தமிழில் 'ஐம்பொறி அகராதி', 'அடுக்கு மொழி அகராதி' முதலிய 100 வகையான அகரமுதலிகளைத் தொகுத்திருப்பவருமான அகர முதலிப் பேரறிஞர் பேரா. மு. சதாசிவம் அவர்கள் வரும் செப்டம்பர்த் திங்களில் இங்கிலாந்தில் உள்ள எக்சிடர் பல்கலைக் கழகத்தில் நடைபெற இருக்கும் உலக அகர முதலி மாநாட்டில் (International Lexicography Conference) கலந்து கொள்வதற்காக அழைக்கப்பட்டுள்ளார்.

அகரமுதலித் துறையில் ஈடுபட்டுள்ள உலக முழுவதிலும் உள்ள அறிஞர் பெருமக்கள் அம்மாநாட்டில் கலந்து கொள்கின்றனர். செப்டம்பர் 9 முதல் 12-ஆம் நாள்வரை அம்மாநாடு நடைபெறும். பேரா. மு. சதாசிவம் அவர்கள் செப்டம்பர் 4-ஆம் நாள் இங்கிலாந்துக்குப் புறப்படுவார்.

ஆங்கிலத்திலும் பத்து வகையான அகரமுதலிகளைத் தொகுத்துள்ள பேராசிரியர் அவர்கள் அவற்றுள் மூன்று அகரமுதலிகளை, உலக அகர முதலி மாநாட்டில் வெளியிட உள்ளார். ஆங்கிலத்தில் அடுக்குமொழி அகரமுதலி (Dictionary of Alliterative And Rhythmic Phrases.) ஆங்கிலத்தின் அழகுகளும் தனிச் சிறப்புகளும் (Beauties And Peculiarities of English) ஆங்கிலச் சொற்றொடர்களின் சொல்லியங்களின் (வாக்கியங்களின்) அகரமுதலி (Dictionary of Sentence Introducers) என்ற வகையில் வெளிவரவிருக்கும் அவ்வகர முதலிகள் போல், இதுவரை ஆங்கில நாட்டவராலும் தொகுக்கப் பெறவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

சென்ற ஆண்டு தில்லியில் சவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற அகரமுதலிக் கருத்தரங்கில் கலந்து கொண்டு இந்திய அறிஞர்களின் பாராட்டினை ஒருமுகமாகப் பெற்ற அவர்கள், உலக அறிஞர்களின் பாராட்டுகளைப் பெற்றுத் திரும்பிவருமாறு நாம் நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகிறோம்.

உ.த.மு.க. அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

கழக முதல்வர் அறிக்கை!

நம் வீடும் அச்சகமும் புலனாய்வு செய்யப்பட்டது குறித்தும், அச்சகப் பொருள்கள் சிலவற்றையும், தமிழ்நிலம் இதழ்எண் 22 முழுவதும் காவலர்கள் கைப்பற்றி எடுத்துச் சென்றது குறித்தும், உ.த.மு.க. பொறுப்பாளர்களும் அன்பர்கள் பலரும், மனம் பதறிப் போய் நாள் தோறும், நம் நிலை எவ்வாறு உள்ளது என்றும், அடுத்து நாம் செய்ய வேண்டுவது என்ன என்றும் வெளியூர்களினின்று நேரில் வந்தும், மடல்வழியாகவும் கலக்கத்துடனும் துடிப்புடனும் கேட்ட வண்ணமாக உள்ளனர்.

நிலைமை இப்பொழுது அமைதியாக உள்ளது. நாள் தோறும் காவலர்கள் நம்மில்லம் வந்து நம்மைக் கண்காணித்துக் கொண்டும் நம்மிடம் பலவாறாக இயக்க நடவடிக்கைகளைக் கேட்டுச் செய்தி தெரிந்து கொண்டு செல்வதாகவும் உள்ளனர். பெரும்பாலும் நம் மேலும், அச்சக மேலாளர், உரிமையாளர் ஆகியோர் மேலும் தமிழக அரசு வழக்குப் போடுதற்கு அனைத்து முயற்சிகளும் எடுத்து வருகின்றதாகத் தெரிகிறது.

இதே போல், மாவட்டக் கிளைக் கழகங்கள் சார்பிலும் ஆங்காங்குக் காவலர்கள் சில நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும், சிலரைத் தளைப்படுத்திப் பொறுப்பில் விட்டுள்ளதாகவும், சிலர் மேல் வழக்குப் போட்டுள்ளதாகவும் செய்திகள் வந்திருக்கின்றன.

இந்த நிலையில் நம் உ.த.மு.க. மாவட்ட, வட்டக் கிளைக் கழகப் பொறுப்பாளர்களும் அன்பர்களுக்கும் ஒரு வேண்டுகோள்! ஆங்காங்கு நடைபெறும் செய்திகளாலும் நடவடிக்கைகளாலும் யாரும் பரபரப்பு அடைய வேண்டாம் என்றும் நிலைகளை உணர்வுவயப் படாமல் நன்கு, நடைமுறை அறிவு வகையில் சிந்தித்து அணுகுமாறும் அவற்றை உடனுக்குடன் தலைமையகத்துக்குத் தெரிவிக்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

எந்த நிலையிலும் அரசு நடவடிக்கைகளுக்கேற்ப, தலைமையகம் முறையான முயற்சிகளைச் செய்து வருகிறது; வரும்! எனவே, ஏற்கனவே ஏற்பட்டுள்ள தமிழீழ இன அழிவுகளையும் துன்பக் கொடுமைகளையும் அன்பர்கள் மனந் தாங்கிக் கொண்டு, பொறுமையுடன் இனிச் செய்ய வேண்டிய அடிப்படையான கடமைகளைப் பற்றி எண்ணி முடிவெடுக்கும் வரையில் எவரும் தனிப்பட்ட வகையில் எந்த நடவடிக்கையிலும் ஈடுபட வேண்டாம் என்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

தலைமையகம், சென்னை-5
11-8-83

பெருஞ்சித்திரனார்
கழக முதல்வர்.

அமெரிக்க படைத்தளங்கள்!

உலகின் எல்லாக் கண்டங்களிலும் 32 நாடுகளில் அமெரிக்காவுக்கு 1500 படைத்தளங்களும் போர் வசதிகளும் உள்ளன. அவற்றில் 5 இலக்கம் அமெரிக்கப் படைத்துறையினர் எப்பொழுதும் இருந்து வருகின்றனர். 1982-இல் அவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 6 விழுக்காடு அதிகரித்தது.

உலகக் கடல்கள் அனைத்திலும் அமெரிக்கப் போர்க் கப்பல்கள் உலா வருகின்றன. அமெரிக்காவுக்கு வெளியே 12000 தொகுப்பு (யுனிட்டு)கள் வரை அமெரிக்க அணுக் கருவிகள் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.

தூரகிழக்கில் சப்பான், பிலிப்பைன்சு, தென் கொரியா, மைக்ரோனிசியா ஆகிய அமெரிக்கத் தளங்களில் 147,000க்கு மேல் அமெரிக்கப் படைக்குழுக்கள் உள்ளன.

36 நாடுகளின் கரைகளைக் கழுவும் இந்து மாகடலை, தனது 'உயிர்வாழ்க்கை நலன்களுக்கான' பகுதி என்று அறிக்கைப்படுத்திய அமெரிக்கா, அங்கு நிலையாகத் தனது 6-ஆவது 7-ஆவதுகடற்படைகளை நிறுத்தி வைத்துள்ளது. தியகோ கார்சியா தீவில் அணுக்கருவிகளைக் கொண்டு வந்து வைத்துள்ளது.

அமெரிக்காவிலிருந்து ஆயிரக் கணக்கான கற்களுக்கு அப்பால் உள்ள குடியுரிமை நாடுகளை அச்சுறுத்திப் பணிய வைப்பதற்கும், அவற்றின் மூல வளங்களைச் சுரண்டுவதற்கும், அவற்றின் மீது படைத்துறைக் கட்டுப்பாடுகளைக் கொண்டுவதற்கும் அல்லாமல் வேறு என்ன நோக்கம் அதற்கு இருக்கிறதோ, தெரியவில்லை.

அமெரிக்கா, இவ்வகையில், படைக்கருவிகளுக்காக ஒவ்வொரு நிமையத்திற்கும் 10 இலக்கம் தாலர் (1 கோடி உருபா) செலவிட்டு வருகிறது.

'விடுதலைக் கனி' தானகப் பழுத்துத் தொங்காது!

அன்புள்ள தனித் தமிழ்க் கதிரே!

வணக்கம். நலம். நாடுவதும் அதுவே. பிரான்சு, இங்கிலாந்து போன்ற வெளி நாட்டுச் சுற்றுச் செலவு பலவழிகளிலும் இன்னலுறும் தமிழர்க்கு மாருந்தாக அமையட்டும். உ.த.மு.க. கிளைகளை உலகெங்கணும் பரப்புவோம். தமிழர் வாழ்வில் ஒளி விளக்கேற்றுவோம்.

தமிழீழத்தில் இன்று நடைபெறும் கொடுமைகள் கண்டு உள்ளம் கொதிக்கின்றது. நாடோறும் சிங்கள வெறியரால் ஆயிரக் கணக்கானோர் தொல்லைப்படும் செய்தி வந்து கொண்டேயிருக்கின்றது. நெஞ்சைக் கசக்கிப் பிழியும் செய்திகள் செவியில் குத்தீட்டிகளாகப் பாய்கின்றன. இதை விடக் கொடுமைகள் இதுகாறும் நடந்ததில்லை என்ற அளவிற்குக் கொடுமைகள் மாந்த உறவுக்கு அப்பால் போய்விட்டது. தமிழன் உலகெங்கணும் கொடிகட்டிப் பறந்த வரலாறு உண்டு. அந்தத் தமிழினம் இன்று ஒரு தூசி அளவேயுள்ள சிங்களரால் . . . ஐயகோ எப்படி எழுதுவது!

விடுதலை வரலாறு தானகப் பழுத்துக் கைகளில் தொப்பென்று விழும் கனி அன்று. அதற்குத் தமிழீழம் மட்டும் என்ன நெறி விலக்கா? ஆனால் இந்தக் கொடுமைகளை எதிர்த்துக் குரல் கொடுக்க தாய்த்தமிழகத்தின் அரசியல் தலைவர்கள் ஒரு சிலர்தாம் உள்ளனர் என்பது மிகுந்த வருத்தத்தைக் கொடுக்கிறது. அந்த அளவிற்குத் தமிழன் ஏதிலியாகி விட்டான். ஏ! தமிழினமே! உன்னைக் காப்பாற்றுவார் யாருமில்லை. காப்பாற்றத் துடிக்கும் கைகளே கட்டப்பட்டுள்ளன. மானத்திற்காக அடிமைத் தளையை அறுப்பதற்காக வாழ்வா, சாவா என்ற நிலையில் இருக்கும் தமிழீழ விடுதலை அரிமாக்களே! நீங்கள் வரலாற்றில் அழியாத இடத்தைப் பெற்று விட்டீர்கள். உங்கள் நடுகல் எங்கட்கு அதனை என்றும் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கும்.

— மெய் அருண் மொழியன்.

எதையேனும் நாம் செய்தாக வேண்டும்!

அன்புள்ள ஐயா,

வணக்கம். கடந்த சில நாட்களாக நமக்கு வந்து விழும் செய்திகள், நம்முடைய குருதியைக் கொப்பளிக்கச் செய்கிறது. ஈழத்திலே நம் அன்பர்கள் கொலையுறுவதும், துன்புறுத்தப் படுவதும் எல்லை மீறி விட்டன. இந்நிலையில் நாம் என்ன செய்வது என்றே தெரியாமல், என் உள்ளம் தடுமாறுகின்றது. அவர்களுக்கு நாம் எவ்வாறு ஆறுதல் சொல்வது? என்னவென்று சொல்வது? புரியவில்லை. தமிழகத்திலே நாம் ஏதேனும் ஒன்றை செய்தேயாகல் வேண்டும். ஈழத் தூதுவர் அலுவலகத்தில் நம்மவர்கள் நுழைந்து பழிக்குப் பழி வாங்காவிட்டால், நாம் தமிழர்கள் என்று சொல்லிக் கொள்வதிலும், பெரிய இன உணர்வு கொண்ட தன்மானத் தமிழர்கள் என்று பறைசாற்றிக் கொள்வதிலும் சிறிதளவும் பயனே இல்லை. நம்முடைய தமிழகத் தலைவர்கள் வழக்கம் போல் கண்டன அறிக்கைகளை வெளியிட்டும், பேரணி, அடைப்பு நடத்தியும் வாளாவிருந்தும் விடுவார்களோ என எண்ணி வருந்துகின்றேன்.

ஐயா, நாமாகிலும் எதையேனும் செய்தாக வேண்டும். ஒன்றுமே செய்யாமல் நம்முடைய உயிரும் உடலும் சாம்பிப் போய் விடுமோ என, என் உள்ளத்திலே ஓர் அவல உணர்வு உருவாகி வருகின்றது.

என் கண்ணீரை அடக்க முடியவில்லை. தனிமையிலே நேற்று இரவெல்லாம், நானே ஏதோதோ எண்ணியெண்ணி அழுதேன். இந்தத் தமிழினம் இப்படியெல்லாம் தொல்லைப்படுகின்றதே — இதைக் கரையேற்ற ஒரு நல்ல தலைவன் கூட வராமலேயே, இவ்வினம் மாண்டு மடிந்து விடுமா? என்று இதற்கு முடிவு காலம் ஏற்படும்? — என்றெல்லாம் என் மனம் வருந்திக்கொண்டே இருக்கின்றது. என் துன்பத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்வதைத் தவிர, என் மனதிற்கு ஓரளவேனும் ஆறுதல் கிடைக்க வாய்ப்பில்லை.

தங்களன்புள்ள, பொற்செழியன். வெங்காளூர்

'தமிழ் நிலம்'

கிழமை இதழ்—சென்னை-5.

1. தனியிதழ் விலை உரு. 0 65
2. ஆண்டுக் கட்டணம் உரு. 36.00
3. அரையாண்டுக் கட்டணம் உரு. 18 00

ஒரிதழுக்கு உரு. 4 00 மேனி முன்பணம் கட்டும் முகவர்கள் எழுதிக் கேட்க.

தொடர்புக்கு : தமிழ் நிலம், 5. அருணாசலத்தெரு. சென்னை-5.

ஆக. 15-ஐ- இழவு நாளாகக் கருதுங்கள்!

இலங்கைக் கலவரம் தமிழகத்திலும் பற்றுவதற்கு முன், இந்திரா நடவடிக்கை எடுக்கவேண்டும்

கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனர் செய்தித்தாளுக்கு விடுத்த அறிக்கை!

சென்னை : 26 : இலங்கையில் தமிழர்களுக்கு நேர்ந்து வரும் பொறுத்துக் கொள்ள முடியாத கொடுமைகளால் தமிழகத்தில் உள்ள தமிழர்கள் மனம் வெதும்பிப் போயிருக்கிறார்கள்.

இலங்கை செயவர்த்தனே அரசு அங்குள்ள சிங்களப் படைத்துறையினரையும், காவல்துறையினரையும் தூண்டிவிட்டுத் தமிழர்களை அறவே அழிக்கத்திட்டமிட்டுள்ளார் என்று தெரிகிறது. இவ்விரண்டு துறைகளுடனும் அங்குள்ள சிங்கள வெறியர்களும் சேர்ந்து கொண்டு தமிழர்கள் மேல் மும்முனைத்தாக்குதலை நடத்தி வருகின்றனர்.

இந்தக் கொடுமையைத் தட்டிக்கேட்கவோ, தடுத்து நிறுத்தவோ, இங்குள்ள மாநில அரசுக்கோ தில்லியரசுக்கோ விருப்பமோ அக்கறையோ இல்லையென்று தெரிகிறது. ஏனெனில் அவர்கள் இந்த வகையில் எந்த வகையான நடவடிக்கையும் இது வரையிலும் எடுத்துக்கொள்ளவில்லை. ஒரு கண்டனக்குரலையும் கூட அவர்கள் எழுப்பவில்லை. இது மிகவும் கொடுமையாக இருக்கிறது.

பக்கத்து வீட்டில் தீப்பற்றி எரியும்போது நம் வீட்டுக்கும் அஃது எளிதில் பற்றலாம் என்னும் அச்சம் கூட இல்லாமல், அதைச் சிறிதும் பொருட்படுத்தாமல் இருப்பது, தமிழினம் இலங்கையில் அழிபடுவதை இந்திய அரசு வரவேற்பதாகத் தெரிகிறது.

உலகெங்கிலும் பரவிவாழும் தமிழர்களுக்குத் தாயகமாக இருப்பது இத்தமிழ்நாடே! இங்கு வாழ்ந்து கொண்டிருப்பவர்களின் உடன்பிறப்புகளும் உறவினர்களுமே, உலகில் உள்ள நாற்பது நாடுகளிலும் மேலாக வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்கள்.

இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குப் போய் வாழும் வட இந்தியர்களுக்குக் கடந்த காலங்களில் ஏதேனும் ஒரு சிறு தீங்கான நிகழ்ச்சி நடந்துள்ள போதெல்லாம் தில்லியரசு உடனுக்குடன் கண்டனம் தெரிவிப்பதும், தூதுவரையனுப்பி அந்நாட்டுத் தூதுவரைக் கலந்து பேசி, அவர்களுக்கு நேர்ந்த தீமைகளையும், கொடுமைகளையும் தீர்க்க முயற்சி செய்வதுமாக இருந்து வந்திருக்கிறது.

ஆனால், அண்டையில் உள்ள இலங்கையில் நீண்ட நெடுங்காலமாக அங்கு வாழ்ந்து வரும் தமிழர்களைப் பொறுத்தமட்டில், அவர்களுக்கு நேர்ந்து வரும் உயிர்க்கொடுமைகளையும் அழிவுகளையும் பார்த்துக்கொண்டு, ஏனோ தெரியவில்லை பாராமுகமாகவே இருந்து வருகிறது. இது தமிழினத்துக்குத் தில்லியரசு செய்து வரும் கொடுமையும் இரண்டகமும் (துரோகமும்) வஞ்சனையும் ஆகும்.

இலங்கைத் தமிழர்கள் அழியும்போது இங்குள்ள தமிழர்கள் இஃது இலங்கையின் உள்நாட்டுச் சிக்கல் என்று வெறுமனே வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது, மாந்தநேயத்துடன் உள்ள எந்த ஓர் இனமும் கூட பொறுத்துக்கொள்ள முடியாத இப்பொழுதைய ஈழத்தமிழர் நிலையை அவர்கள் உறவினமான தமிழினம் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்பது நெடுநாளைக்கு இயலக்கூடிய செய்தியன்று. எவ்வாறேனும் ஓர்நாள் அடக்கி வைக்கப்பட்ட இவ்வுணர்வு கிளர்ச்சியுற்று வெடித்தே தீரும்!

இலங்கையில் உள்ள தமிழர்கள் தாக்கப்படுவதால், உணர்ச்சியூட்டப்பட்ட இங்குள்ள தாயகத்தமிழர்களும் அவர்களுடன் சேர்ந்து, அவர்களுக்காகப் போர்க்கொடி எடுக்கும் நிலை அண்மையில் வந்தாலும் வரலாம். அப்படி ஒரு நிலை வருமானால் தமிழ்நாடும் தீப்பிடித்து எரியவே செய்யும். அக்கால் இங்குள்ள வடநாட்டவர்களுக்கு எவ்வகையிலும் ஒரு சேதமான நிலையே உருவாகும். அவர்களைக் காப்பாற்றுவது அப்போது அரிதாகவும் போகும்.

எனவே, அந்தநிலையொன்று வெடித்துச்சிதறுவதற்கு முன், இலங்கைத் தமிழர்களின் இன அழிவு தடுத்த நிறுத்தப்படவேண்டும். அதற்கு ஏற்ற முயற்சியை இந்தியத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டும். என்று கேட்டுக்கொள்கிறோம்.

இல்லையானால் இந்தியாவிலும், குறிப்பாகத் தமிழகத்திலும் இனக்கலவரம் ஏற்படுவதை யாராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது என்று எச்சரிக்கின்றோம். இனக்கலவரம் தோன்றிவிட்டால் அது விடுதலையுணர்வாக வளர்வதற்கு நெடுநாள் ஆகாது என்றும் அரசு உணரவேண்டும்.

இவ்வாறு உலகத்தமிழின முன்னேற்றக் கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் செய்தித்தாள்களுக்கு விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

இதுபோன்ற புதுக்குடியேற்றத் திட்டங்களால் கிழக்குப்பகுதி மலாயாவில் பல்லாயிரக் கணக்கான குறுக்கங்(ஏக்கர்)களில் - காட்டுப் பகுதியில் நிலமக்கள் (பூமிபுத்திரா) என்ற மலாய்க்காரர்கள் 90% மேனியும் தமிழர் பத்து விழுக்காடு மேனியும் இருபது ஆண்டுக்குமுன் குடியேற்றப் பட்டுச் செம்பனை, தொய்வம் (ரப்பர்) போன்ற பிறபயிர்கள் செய் விக்கப் படுகின்றனர். ஆனால் குமுகப்பாதுகாப்பில்லாததாலும் இன விழுக்காட்டு முறையின் ஏதம் கருதியும் சீனர்கள் குடியேறவில்லை. (அரசு வகுத்தத் திட்டம் மலாயர் 60% + சீனர் 30% + இந்தியர் 10%)

மலேசியாவில் இத்தகைய செம்பனைத் தோட்டங்களில் பல அரசுக்கும், அரசுச் சார்பான பெரிய கூட்டுறவுக் கழகங்களுக்குமே சொந்தம். சில தனியுடைமைத் திட்டங்களில் குடிவாணவர்களான தமிழர்கள் நிலவுரிமையுடன் பட்டயம் பெற்றுச் சிறப்பாக வாழ்ந்தாலும் இவர்களுக்குக் கோயிலும், தமிழ்ப்பள்ளியும் இல்லை. தொலைதூரக்காடுகளில் வாழும் இவர்களுக்கு பலாய்ப்பள்ளிதான் கல்விக்கூடம்.

இப்போது தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் பழைய மரபுச் சூழலில் பல வுரிமைகளுடன் வாழ்ந்தாலும், புதுக்குடியேற்றக்காரர்களுக்கு அவ்வாய்ப்புகள் இல்லை. சிவப்புப் பட்டையாளர்களான நாடற்ற தமிழ்த் தொழிலாளர்களை அழிக்கும் இந்தக் கொடுமையான 'மூனருந்தரக் குத்தகைச் சட்டம்' ஒழிக்கப்படாத வரை இவர்கள் கரை ஏறுவது இயலவே இயலாது. இவ்வாறு தமிழர்பலர் பாதுகாப்பின்றி அவதிப்படுகின்றனர்.

— கோலாலம்பூர் தமிழ்நிலச் செய்தியாளர்.

பாவலரேறே! பெருஞ்சித்திரனரே!

பல்லாண்டு வாழ்க!

(கடந்த 10-7-83-ஆம் நாளன்று சென்னை; திருவொற்றியூர் கிளை, உ.த.மு.க. தொடக்க விழாவில் பாவலரேறு அவர்களுக்குப் படித்தளித்த பாராட்டு.)

தமிழினத்தின் காவலரே! உலகம் போற்றும்
தன்மான ஒளிச்சுடரே' நீடு வாழ்க!
உமி அளவும் தமிழுணர்வே இருந்திடாமல்
உண்மையிலே நான் தமிழன் என உரைப்பார்!
நகைப்பதற்கே இதைவிட,வே றென்ன வேண்டும்?
நலிந்து விட்டோம், நரிக்கூட்டச் செயல் களாலே!
விளம்பரத்தால் தமிழ்என்று பெயரும்பெற்ற
வெறும் பேச்சு வீரரெல்லாம் நிறைய உண்டு!
'களம்காணப் புறப்பட்டேன்; தமிழர் சிந்தும்
கண்ணீரைத் துடைப்பதற்கே அஞ்சேன்' என்று
தொடைதட்டிக் கொண்டிங்கே வந்தோ ரெல்லாம்
தலைமுறைக்கும் பொருளதனைச் சேர்த்துக் கொண்டு
நடைகட்டி விட்டார்கள் அவரை யெல்லாம்
நாம் என்ன செய்து விட்டோம்? அவர்போ லிங்கே
நிலைகெட்டோர் இருந்திடினும், தமிழர்க்காக
நெஞ்சுயர்த்தி அரிமாப்போல் செயலை ஆற்று!
விலைமதியாப் பொருளே! பா வலர்களேறே!
விண்ணுள்ள வரை நீங்கள் வாழ்க! வாழ்க!
ஆழகடலே, தனித்தமிழில்! ஐயா! உம்மை
வாழ்த்துதற்குத் தகுதியில்லை, எனினும் இங்கே
வாழ்த்து கின்றோம் நீடுழி வாழ்கஎன்று
வாழ்த்துதற்கே அகவைவரம் பின்மையாலே!

'இலக்கியச்சோலை'
எண்ணூர் (திருவொற்றியூர்)
10-7-1983.

ம. தென்முகநம்பி,
(தட்சிணாமூர்த்தி.)
(அசோக் லைலேண்டு)

கொற்கைத்தமிழ் மன்றம்!

திருவள்ளுவர் கற்சிலை அமைப்பு வேண்டுகோள்!

வள்ளுவர் இன்தறள் வெண்பா உலகத்தோர்
உள்ளிருள் நீக்கும் ஒளி

பேரன்புடையீர்!

வணக்கம் ஏரலில் பல்லாண்டுகளாகத் தமிழ்ப்பணி ஆற்றிவரும் கொற்கைத்தமிழ்மன்றம் இவ்வூரில் உலக முதற் புலவராம் திருவள்ளுவருக்குக் கற்சிலை எடுக்கப் பெருஞ் செலவில் பணி மேற்கொண்டுள்ளது.

முல்லை அரும்பு நெகிழ்ந்து மலர்ந்து தேனையும் மணத்தையும் தருவது போல உங்கள் அருள் மிக்க நன்னெஞ்சம் நெகிழ்வதாகுக. சிலை அமைப்பின்கீழ் கல்லில் உங்கள் பெயரைச் செதுக்கி என்றும் நிலைக்கச் செய்யக் குறிப்பிட்ட தொகை தந்து உதவும்படி பணிவன்புடன் வேண்டுகிறது.

மன்றக் கொள்கைகளுள் முதன்மையானவை.

1 தூத்துக்குடித் துறைமுகம் என்றிருப்பதைக் கொற்கைத் துறைமுகம் என மாற்றும்படி அரசை வேண்டுதல்.

2 பழம் பெருமை வாய்ந்து இன்று குறைந்துபோன கொற்கையைப் பழைய பெருமைக்கு உரியதாய்ச் சுற்றுலா இடமாக்க அரசு மேற் கொண்டு செயல்படுதல்.

இப்பொழுது நிகழும் பணிகள்.

1 ஏரல் சிவன்கோவிலில் வெள்ளிக்கிழமைதோறும் புலவர் திரு. பழநிகிருட்டிணன். க.மு. அவர்களைக் கொண்டு திருவாசக விரிவுரை நிகழ்த்துகிறது.

2 ஞாயிறுதோறும் திருக்குறள், சிலப்பதிகாரம், திருமந்திரம் ஏனைய பொதுச் சொற்பொழிவுகள் நிகழ்கின்றன.

3 தமிழார்வலர் சிலர் புலவராகத் தமிழ் படிக்கப் பாடம் சொல்லி உதவுகிறது.

4 கலப்பற்ற நல்ல தமிழைப் பேசவும் எழுதவும் கடைகளின் விளம்பரப் பலகைகளில் தனித்தமிழே எழுதவும் தன்னாலான முயற்சியை மேற்கொள்கிறது.

ஆகையால் கொற்கைத் தமிழ் மன்றம் மேற்கொள்ளும் வள்ளுவர் சிலை அமைப்புப்பணி சிறப்புற அமையத் தங்களின் நல்நெஞ்சம் நிறைவு செய்து தருமாக.

இரா. க. அருணாசலம், மன்றத்தாளாளர்.
அருள்மிகு ஆனையர் திருக்கோவில், உரிமையாளர்.

புலவர். ச. சிவசங்கு, தலைவர்.

புலவர். க. ஐயாத்துரை க.மு; கல்,இ. செயலர். கொற்கைத்தமிழ்மன்றம் ஏரல்,

---

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்,
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- பனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். பதிவு எண்: TN/MS/C)/657

அனுப்புதல்:
தமிழ்நிலம்
5. அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை — 5

பெறுநர்.
திரு.

நூல் - அஞ்சல்

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்.
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.